# எழில் திருவடி ஏற்றவா! எமை ஏற்ற வா!

முனைவர் ந. மைதிலி

"வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர்முடி தோயும்
பாதத்தான் பாதம் பயின்று"

என்று இறையின் திருவடிச் சிறப்பினைப் புகழ்வார் பூதத்தாழ்வார். அதேபோல மாணிக்கவாசகரும்,

"தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வ"

என்று ஈசனின் திருவடியைப் போற்றுவார். எனவே, இறைவன் என வணங்குதற்குரியவர்கள் எழில் திருவடி பெற்றவர்கள் என்பது முடிபு.

தமிழிலக்கியத்தில் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று அந்தாதி. இதனை வடமொழியில் பிரபந்தம் என்பர். பொதுவாக, அந்தாதி நூல்கள் இறையைப் பற்றியே பாடப்பட்டிருக்கும். சான்றாக, திரு வேங்கடத்தந்தாதி, அபிராமி அந்தாதி, சரஸ்வதி அந்தாதி முதலானவற்றைச் சொல்லலாம். இறைக்கும் அந்தாதி அமைப்பிற்கும் என்ன தொடர்பு என்பதைச் சற்றுக் காண்போம். அந்தாதி யின் அமைப்பாவது ஒரு பாடலின் ஈற்று அடியோ/ சொல்லோ/சீரோ அடுத்த பாடலின் முதலாக வைத்துப் பாடப்படுவது. இந்த அமைப்பை இறையுடன் பொருந்திப் பார்ப்போம்.

அந்தம் + ஆதி = அந்தாதி. இறைவனின் அந்தமாம் திருவடியில் எவன் ஒருவன் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கிறானோ, அவன் ஆதியான முதன்மைத் தன்மையைப் பெறுவான் என்பதைச் சொல்லாமல் விளக்குவதே அந்தாதி அமைப்பின் நோக்கமாகும். ஆக, அந்தமாகிய திருவடியில் பணிந்தால் ஆதியான ஏற்றம் கிட்டும் என்பது திண்ணம். அப்படிப்பட்ட இறைவனின் திருவடிகள் மேன்மையுடையது; அபயமளிப்பது; கைதூக்கி ஆள்வது. இத்தகு சிறப்புடைய இறையின் திருவடிகளால் பேறு பெற்ற பலரில் சிலரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## வாமனனின் திருவடி

குள்ளமாய் வந்த கள்ளன். குறுகிய சிறிய அளவான பாதங்களை உடையவன். தானம் பெற வந்து நிதானமாய் பெற்று நிலைத்த தானத்தை அருளிச் சென்றவன். மகாபலிச் சக்கரவர்த்தியிடம் தானம் பெற வேண்டுமென்பது பொது நோக்கம். தானம் பெறவும், தானம் அளிக்கவும் தன்னிரு தாளினையே பயன்படுத்தினான். மூன்றடி மண் கேட்டு ஈரடியால் விண்ணும் மண்ணுமளந்து மூன்றாமடிக்கு மகாபலியின் தலையிலே திருவடியை வைத்து விண்ணோரும் மண்ணோரும் வாழ்த்த கடலெனக் கருணை பொழிந்தனன். பெற்றது விண்மண். அளித்தது விண்மண் என யாவரும் மெச்சும்படி. இதைவிட எம்பெருமானின் எழில் திருவடியின் மேன்மைக்குச் சான்று வேண்டுமா? இந்நிகழ்வின் சிறப்பினை நம்மாழ்வார்,

"உலகளந்த திருத்தாளிணை நிலத்தேவர் வணங்குவர்" என்று திருவிருத்தத்தில் பாடியுள்ளார்.

## கண்ணனின் திருவடி



யமுனையில் காளிங்கன் என்ற பாம்பு சாபத்தினால் வாழ்ந்து வர, அந்நீரைப் பருகிய ஆநிரைகளெல்லாம் உயிரிழக்க, எம்பெருமானாம் ஆயர்குலத்தோன்றல் ஆநிரை மேய்த்த காளிங்கன் மீது தன்திருவடியைப் பதித்து நடனமிடுகின்றான். காளிங்கன் கண்ணனின் திருவடியில் சிக்குண்டு தன்னையிழக்கிறான். என்ன புண்ணியம்